பணமும் வங்கித் தொழிலும்

பண நிரம்பல்

1982 ஆம் ஆண்டில் நாணய நிலைமை சென்ற ஆண்டைப்போன்று முக்கிய நாணய மாறிகளில் வளர்ச்சிகளைக் காட்டியுள்ளது. புழக்கத்திலுள்ள நாணயத்தையும், வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வசமுள்ள மொத்த கேள்வி, தவணை சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கும் விரிந்த பண நிரம்பல் (M_2) 1981 இன் ரூ. 45,870 இலட்சம் அல்லது 23 சதவீத அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் ரூ. 60,630 இலட்சத்தால் அல்லது 25 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. ஆயினும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வசமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்களின் (போலிநாணயம்) வளர்ச்சி வீதத்தில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. 1980 இல் 41 சதவீதமாகவிருந்த இவ் வைப்புக்களின் வளர்ச்சி வீதம் 1981 இல் 38 சதவீதமாகக் குறைவுற்று 1982 இல் 30 சதவீதமாக மேலும் வீழ்ச்சியுற்றது. இவ் வீழ்ச்சி முக்கியமாக தேசிய சேமிப்பு வங்கி அளிக்கும் வட்டி வீதங்களில் எதுவித மாற்றமுமின்றி 1982இன் நடுப்பகுதியில் வர்த்தக வங்கி வைப்பு வீதங்களில் ஏற்பட்ட கீழ் நோக்கிய திருத்தத்தாலேயே ஏற்பட்டது. ஆகவே M_2 இல் ஏற்பட்ட சிறு வளர்ச்சி, நாணயமும் பொது மக்கள் வசமுள்ள கேள்வி வைப்புக்களும் என வரைவிலக்கணம் செய்யப்பட்ட குறுகிய பண நிரம்பலின் M_1 இன் விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சியில் பெருமளவிற்குப் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

M_1 இல் சென்ற ஆண்டு ஏற்பட்ட ரூ. 5,960 இலட்சம் அல்லது 6 சதவீத அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ. 17,350 இலட்சம் அல்லது 17 சதவீதத்தால் உயர்வுற்றது. இதில், பொதுமக்கள் வசமுள்ள கேள்வி வைப்புக்கள் சிறப்பாக இவ்வாண்டின் இரண்டாம் மூன்றும் காலாண்டுகளில் தளம்பியபின் ஆண்டினிறுதியில் ரூ. 5,710 இலட்சம் அல்லது 11 சதவீதம்கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனவே M_1 இல் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சிவீதம் 1982 இல் ரூ. 11,650 இலட்சம் அல்லது 24 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்த பொதுமக்களது நாணய கையிருப்புக்களின் அதிகரித்த விருப்புரிமையிலே முக்கியமாசப் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. ஆகக்கூடிய மாதாந்த அதிகரிப்புக்கள் மாச்சிலும், திசெம்பரிலும் ஏற்பட்டன. இக்காலப்பகுதியில் மாதாந்த வளர்ச்சி வீதங்கள் ஒவ்வொன்றும் 6 சதவீதமாக விளங்கின. இது ஏப்பிரலிலும், திசெம்பரிலும் நிகழும் விழாக் காலங்களை எதிர்நோக்கி நாணயத்திற்கு ஏற்பட்ட அதிகரித்த விருப்புரிமையைக் காட்டுகின்றது. மேலும் இவ்வாண்டின்போது M_1 இன் கேள்வி வைப்புக்கூறு 52 சதவீதத்திலிருந்து 49 சதவீதமாகக் குறைவுற்றது. தேர்தல் ஆண்டில் ஏற்படும் நிலையற்ற தன்மைகளும் அதிகரித்த நாணய கையிருப்புக்களுக்குக் காரணமாயிருந்திருக்கலாம். எனினும் பொதுமக்களிடையேயுள்ள வங்கித்தொழில் பழக்கங்களிலே பின்னடைவொன்றை ஏற்படுத்தியதென ஊகிக்கலாம்.

பண நிரம்பல்

மாதாந்தம்



இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.47

நாணயக்கூட்டுக்கள் 1980—1982

ரூபா பத்து இலட்சங்களில்

காலமுடிவில்	குறுகிய பண நிரம்பல் (M1)						விரிந்த பண நிரம்பல் (M2)					
	1980	1981	1982	1979ஐவிட 1980 இல் % மாற்றம்	1980ஐவிட 1981 இல் % மாற்றம்	1981ஐவிட 1982 இல் % மாற்றம்	1980	1981	1982	1979ஐவிட 1980 இல் % மாற்றம்	1980ஐவிட 1981 இல் % மாற்றம்	1981ஐவிட 1982 இல் % மாற்றம்
சனவரி ..	7,848	9,208	11,046	+28.8	+17.3	+20.0	15,118	20,532	26,890	+23.8	+35.8	+31.0
பெப்புருவரி ..	7,880	9,288	11,178	+21.4	+17.9	+20.4	15,488	20,199	26,758	+25.9	+30.4	+32.5
மாச்சு ..	8,375	10,125	11,671	+24.0	+20.9	+15.3	16,052	21,984	28,240	+24.3	+36.9	+28.5
எப்பிறல் ..	8,384	9,573	11,276	+24.6	+14.2	+17.8	16,379	21,555	28,395	+25.8	+31.6	+31.8
மே ..	8,289	9,168	11,132	+23.8	+10.6	+21.5	16,316	21,437	29,128	+23.3	+31.3	+35.9
யூன் ..	8,278	9,033	10,815	+23.7	+ 9.1	+19.8	16,414	21,681	28,739	+24.5	+32.0	+32.6
யூலை ..	8,196	9,097	10,710	+22.9	+11.0	+17.8	16,658	22,065	28,459	+24.8	+32.5	+29.0
ஒகத்து ..	8,240	9,197	10,892	+19.5	+11.6	+18.5	17,100	22,165	28,494	+26.2	+29.6	+28.6
செத்தெம்பர் ..	8,131	9,445	11,171	+14.7	+16.1	+18.3	17,700	23,460	29,781	+27.5	+32.5	+27.0
ஒற்ரோபர் ..	8,388	9,520	11,413	+17.2	+13.4	+19.9	18,369	23,837	30,161	+29.3	+29.7	+26.6
நவெம்பர் ..	8,976	9,459	11,452	+24.1	+ 5.3	+21.1	19,040	23,842	29,860	+31.9	+24.9	+25.3
திசெம்பர் ..	9,428	10,024	11,760	+22.9	+ 6.3	+17.4	19.860	24,447	30,510	+31.9	+23.0	+24.9
மாதாந்த சராசரி ..	8,368	9,429	11,210	+22.2	+12.7	+18.9	17,041	22,267	28,785	+27.5	+30.7	+29.3

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டுதோறும் M_2 இல் ஏற்படும் அதிகரிப்புக்கள் இவ்வாண்டின் முதலாம் அரைப் பகுதியில் 29 இற்கும் 36 சதவீதத்திற்கும் இடையிலான மட்டத்தில் ஒழுங்கற்றமுறையில் தளம்பியபின் 1982 யூனில் 33 சதவீதமாகவிருந்து திசெம்பரில் 25 சதவீதமாகப் படிப்படியாக வீழ்ச்சியுற்றன.

1980 இல் 6.6 சதவீதமாகவிருந்து 1981 இல் 7.7 சதவீதத்துக்கு அதிகரித்த M_1 இன் வருமான வேகம் (அதாவது M_1ஆல் வகுக்கப்பட்ட நடைமுறைக்காரணிச் செலவு விலையிலான மொ. தே. உ) 1982 இல் அதே மட்டத்திலிருந்தது. ஆயினும் 1980 இல் 3.1 ஆக அமைந்த M_2 இன் வருமான வேகம் 1981 இல் 3.2 ஆக அதிகரித்து 1982 இல் சிறிதளவால் 3.0 ஆகக் குறைவுற்றது. M_2 இன் வருமானவேகத்திலேற்பட்ட இச்சிறு வீழ்ச்சி, நாணயக் கூட்டுகளின் வளர்ச்சி வீதங்கள் ஏறக்குறைய பொருட்களினதும், பணிகளினதும் உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்ப உயர்வுற்று சென்ற ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் விலை மட்டத்தில் குறைந்தளவு அமுக்கத்தை ஏற்படுத்தியமையைக் காட்டுகின்றது. இவ்வபிவிருத்தியை ஓர் அளவுக்கு பிரதிபலிக்கும்வகையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் புள்ளிக்கு புள்ளி என்ற அடிப்படையில் சென்ற ஆண்டின் 18 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 1982 திசெம்பரில் முடிவடைந்த 12 மாத காலத்தில் 5 சதவீத அதிகரிப்பை மட்டுமே பதிவுசெய்தது.

சென்ற சில ஆண்டுகளில் போலி நாணயத்தின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியுற்ற போதும், முழுமையான நியதிகளில் போலி நாணயம் 1980, 1981 இல் முறையே ரூ. 30,440 இலட்சம், ரூ. 39,900 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களையும், நடைமுறை ஆண்டில் ரூ. 43,280 இலட்சம் கொண்ட விரிவையும் பதிவுசெய்தது. ஒப்பு ரீதியில் நடைமுறை ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட குறைந்த வீத வளர்ச்சிக்கு 1982 நடுப்பகுதியில் வர்த்தக வங்கிகளினால் தவணை வைப்பு வீதங்களின் மீது செய்யப்பட்ட கீழ்நோக்கிய திருத்தமே காரணமாகும். 1982 இறுதியில் மொத்த போலி பணநிரம்பல் ரூ. 187,500 இலட்சமாக விளங்கியது. ஆயினும் இவ்விரிவின் முக்கிய பங்கு (80 சதவீதம்)இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதைப் பிரதிபலிக்கும்வகையில் 1981 திசெம்பரில் 38 சதவீதமாக அமைந்த தவணை சேமிப்பு வைப்புக்களின் ஆண்டு வளர்ச்சி வீதம் 1982 மேயில் 47 சதவீதமாக உயர்வுற்று ஆண்டினிறுதியில் படிப்படியாக 30சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இவ் வீழ்ச்சிக்கு, 1982 யூன் தொடக்கம் வர்த்தக வங்கிகளினால் வைப்புக்கள் மீதுஅளிக்கப்பட்ட குறைந்த வட்டி வீதங்களைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளிலிருந்து தேசிய சேமிப்பு வங்கிக்கு வைப்புக்களை மாற்றியமையே முக்கிய காரணமாகும். இவ்வாறாயினும் M_2 இல் தவணை சேமிப்பு வைப்புக்களின் பங்கு 59 சதவீதத்திலிருந்து 61 சதவீதமாக அதிகரித்து பொதுமக்கள் வட்டியை அளிக்கும் நாணயச் சொத்துக்களை விரும்புவதை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வபிவிருத்தி குறைந்தளவு பணவீக்க அமுக்கங்கள் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரத்தில் வைப்புக்கள் மீது வர்த்தக வங்கிகள் அளிக்கும் உண்மையான வருவாய் வீதத்தினால் ஏற்பட்டிருக்கலாம்.

அட்டவணை 1.48

பணக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

(தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்)

விடயம்	1980 திசெம்பர்	1981 திசெம்பர்	1982 திசெம்பர்	மாற்றம் 1980/1981		மாற்றம் 1981/1982	
				தொகை	சதவீதம்	தொகை	சதவீதம்
பணக்கூட்டுக்கள்							
1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம்	4,180.8	4,822.9	5,987.7	+ 642.0	+ 15.3	+ 1,164.8	+ 24.1
2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள்	5,247.3	5,201.5	5,772.1	— 45.8	— 0.8	+ 570.6	+ 10.9
குறுகிய பணநிரம்பல் (M_1)	9,428.2	10.024.4	11,759.8	+ 596.2	+ 6.3	+ 1,735.4	+ 17.3
3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள்	10,432.0	14,422.5	18,750.1	+ 3,990.4	+ 38.2	+ 4,327.6	+ 30.0
3. 1 கூட்டுறவு நிறுவனங்கள்	315.4	334.5	357.3	+ 19.1	+ 6.0	+ 22.8	+ 6.8
3. 2 அரச கூட்டுத்தாபனங்கள்	2,036.0	2,768.4	4,257.8	+ 732.4	+ 35.9	+ 1,489.4	+ 53.8
3. 3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள்	8,080.6	11,319.6	14,135.0*	+ 3,238.9	+ 40.0	+ 2,815.4	+ 24.8
விரிந்த பண நிரம்பல் (M2)	19,860.2	24,446.8	30,509.9	+ 4,586.6	+ 23.0	+ 6,063.0	+ 24.8
ஏதுக்காரணிகள்							
1. உள்நாட்டுக் கொடுகடன்	25,288.4	33,619.1	42,102.5	+ 8,330.7	+ 33.0	+ 8,483.4	+ 25.2
1. 1. அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன்	8,971.9	12,789.1	17,150.2	+ 3,817.2	+ 42.5	+ 4,361.1	+ 34.1
1. 1. 1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக்கொடுகடன்	11,904.6	15,667.4	19,719.8	+ 3,762.7	+ 31.6	+ 4,052.3	+ 25.8
மத்திய வங்கியால்	10,965.5	14,104.4	18,000.5	+ 3,138.9	+ 28.6	+ 3,896.0	+ 27.6
வர்த்தக வங்கிகளால்	939.1	1,563.0	1,719.3	+ 623.8	+ 66.4	+ 156.3	+ 9.9
1. 1. 2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும்	— 2,932.7	— 2,878.3	— 2,569.6	+ 54.5	+ 1.8	+ 308.7	+ 10.7
1. 2. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன்	16,316.5	20,830.0	24,952.3	+ 4,513.5	+ 27.7	+ 4,122.3	+ 19.8
1. 2. 1 கூட்டுறவு நிறுவனங்கள் (அ)	853.1	946.5	892.6	+ 93.4	+ 11.0	— 53.9	— 5.7
1. 2. 2 அரச கூட்டுத்தாபனங்கள்	4,122.7	4,487.7	4,677.4	+ 364.9	+ 8.8	+ 189.7	+ 4.2
1. 2. 3 ஏனைய தனியார் துறை வாடிக்கையாளர்கள்	11,340.7	15,395.8	19,382.3	+ 4,055.1	+ 35.7	+ 3,986.5	+ 25.8
2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய)	3,630.7	2,940.3	2,371.8	— 690.4	— 19.0	— 1,568.5	— 19.3
3. ஏனைய விடயங்கள் (தேறிய)	— 9,058.9	—12,112.6	—13,964.4	— 3,053.7		— 1,851.9	
3. 1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய)	— 6,058.9	— 7,615.5	— 9,382.7	— 1,556.6		— 1,767.3	
3. 2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய)	— 2,832.2	— 4,354.8	— 4,596.1	— 1,522.6		— 241.3	
3. 3 இடைப்போக்கிலுள்ள விடயங்களுக்கான சீராக்கங்கள்	— 167.8	— 142.3	14.4	+ 25.5		+ 156.7	
விரிந்த பணம் (M2)	19,860.2	24,446.8	30,509.9	+ 4,586.6	+ 23.0	+ 6,063.0	+ 24.8

குறிப்பு: அடையாளங்கள் M2 இன்மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) முதிர்ச்சியடைந்த பொருட்களின் பெறுகைகளின் திரவத்தன்மையை எதிர்பார்த்து நெற்சந்தைப்படுத்தும் சபையின் வசமுள்ள தொங்கற் கணக்கிலுள்ள தொகையை கணக்கில் எடுக்கும்பொருட்டு கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் சீராக்கம் செய்யப்பட்டது. இத்தொகைகள் 1980, 1981, 1982 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூ. 5,152 இலட்சம், ரூ. 3,474 இலட்சம், ரூ. 2,951 (தற்காலிகமானவை) இலட்சங்களாக இருந்தன.

* வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்



இலங்கை மத்திய வங்கி

1982இல் தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களதும், உண்மைத் தனியார்துறையினதும் முறையே ரூ. 14,89 இலட்சம், ரூ. 28,150 இலட்சம் கொண்ட வைப்புக்களே முக்கிய காரணமாகும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினது வைப்புக்களின் விரிவு சென்ற ஆண்டின் 306 சத வீதத்திற்கு மாறாக 54 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது ஆயினும் நடைமுறை ஆண்டில் வர்த்தக வங்கிகளின் வட்டிவீதக் குறைப்பைத் தொடர்ந்து 1982இன் நடுப்பகுதி தொடக்கம் இவ்வங்கிகளிலிருந்து தேசிய சேமிப்பு வங்கிக்கும் நிதிக்கூட்டு நிலையங்களுக்கும் வைப்புக்கள் பெருமளவில் வெளிச்சென்றதனுல் ஏனைய தனியார்துறை வாடிக்கையாளரின் (உண்மையான தனியார்துறை) தவணை வைப்புக்களின் விரிவு வீதம் 40 சதவீதத்திலிருந்து 20 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது.

1982இன் நாணய முன்னேற்றங்கள், குறிப்பாக முக்கிய உதவு காரணிகளைப் பொறுத்தவரை சென்ற ஆண்டைப்போன்று அதே பண்புகளைப் பிரதிபலித்தன. சென்ற ஆண்டின் ரூ. 83,310 இலட்ச உள்நாட்டுக் கொடுகடன் விரிவுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டின் விரிவு சிறிது கூடுதலாக ரூ. 84,830 இலட்சமாக விளங்கியது. ஆயினும் சதவீத நியதிகளில் வளர்ச்சி வீதம் 1981இல் 33 சதவீதத்திலிருந்து மீளாய்விற்குரிய ஆண்டில் 25 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றது. சென்ற ஆண்டைப்போன்று இக்காரணியின் விரிவுத் தாக்கம் வெளிநாட்டு வங்கித்தொழில் இருப்புச் சொத்துக்களின் (தேறிய) ரூ. 5,680 இலட்சம் அல்லது 19 சதவீத வீழ்ச்சியினுலும், வங்கித்துறையினது ஏனைய விடயங்களின் (தேறிய) ரூ. 18,520 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. வங்கித்துறையின் ஏனைய விடயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மத்திய வங்கி வசமிருந்த ஒன்று திரட்டப்பட்ட ஒதுக்குகளினுல் 'ஏனைய பொறுப்புக்களில்' ஏற்பட்ட அதிகரிப்பே பெருமளவிற்குக் காரணமாக விளங்கியது.

1982இன் உள்நாட்டுக் கொடுகடன் விரிவு அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனினதும் (அதேகொ) தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடனினதும் (ததுமொகொ) முறையே ரூ. 43,610 இலட்சம், ரூ. 41,220 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களை உள்ளடக்கியுள்ளது. இவை சென்ற ஆண்டின் 43, 28 சதவீத வளர்ச்சிகளுக்கு மாருக 34, 20 சதவீத வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. இவ்விரு துறைகளினது வளர்ச்சி வீதங்களும் சென்ற இரு ஆண்டுகளிலும் வீழ்ச்சியைக் காட்டியுள்ளனவென்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் முழு வளர்ச்சி 1981இலும் சிறிது அதிகமாகவிருப்பினும் இவ்வாண்டில் வெற்றிகரமான ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டிராதுவிடின் வங்கித் துறையிலிருந்து பெற்ற அரசாங்கக் கடன்பாடுகள் இன்னும் கூடுதலாக இருந்திருக்கும். 1982 செத்தெம்பர் வரை ரூ. 40,000 இலட்சம்கொண்ட முதலாவது ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டம் முற்ருகப் பெறப்பட்டமையினுல், அதே மாதத்தில் ரூ. 20,000 இலட்சம் கொண்ட மேலதிகக் கடன் மிதக்கவிடப்பட்டது. பெரும்பாலும் தேசேவ இலிருந்து பெறப்பட்ட அதிகரித்த உதவு தொகைகளினுல்

வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்



இலங்கை மத்திய வங்கி

இக்கடனும் ஆண்டிறுதியில் முற்ருகப் பெறப்பட்டது. 1982 யூனில் வர்த்தக வங்கிகளினது வைப்பு வீதங்களின் கீழ் நோக்கிய திருத்தத்தை தொடர்ந்து, தேசேவ அதிகரித்த வைப்புக்களைத் திரட்டியமையாலேயே இது இயலுமாயிருந்தது. மேலும் ஐ. அ. டொலர் 1,000 இலட்சத்திற்கான யூரோ நாணயக் கடன் ஏற்பாடுகளிலிருந்து ஐ. அ. டொலர் 400 இலட்சத்தை (ரூ. 8,360 இலட்சம்) எடுப்பனவு செய்தமையால், அரசாங்கம் வங்கித்துறையில் தங்கியிருந்தமையை குறைத்துக் கொண்டது. மேலும் 1982இல் காணப்பட்ட அரசாங்கத்தின் மூலதன, மீண்டெழும் செலவு தொடர்பான கூடிய வீத குறைச் செலவும் இவ்வாண்டில் குறைந்த பணத் தேவைகளை ஏற்படுத்தின.

மத்திய வங்கியிலிருந்து பெற்ற அரசாங்கக் கடன்பாடுகள் சென்ற ஆண்டின் ரூ. 31,390 இலட்சம் அல்லது 29 சதவீத அதிகரிப்பைப் போன்ற அதிகரிப்புக்கு எதிராக ரூ. 38,960 இலட்சம் அல்லது 28 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு இவ் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 34,000 இலட்சம் பெறுமதி கொண்ட புதிய திறைசேரி உண்டியல்களைப் பெருமளவிற்குப் பிரதிபலிக்கும் வங்கி வசமுள்ள அரசாங்க உத்தரவாதப் பிணைகளே பெரும்பாலும் காரணமாகும். மறுபுறம், வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற அரசாங்கக் கடன்பாடுகள் 1981ஆம் ஆண்டின் ரூ. 6,240 இலட்சம் அல்லது 66 சதவீத குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 1,560 இலட்சம் அல்லது 10 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தன. திறைசேரி உண்டியல்கள் மீதான வர்த்தக வங்கி முதலீடுகள் ஏறக்குறைய 1981 திசெம்பரின் அதே மட்டத்திலிருக்கையில் 1982 ஒகத்திலிருந்து ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டு வர்த்தக வங்கிகள் அரசாங்க ரூபாக் கடன் திட்டத்தில் பங்குபற்றுதற்கு அனுமதியளிக்கப்பட்டமையைத் தொடர்ந்து இத்திட்டத்திற்கான இவற்றின் உதவுதொகைகள் ரூ. 1,030 இலட்சத்தால் அதிகரித்தன.

1981இன் நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்திய கட்டுப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை நடவடிக்கையினைத் தொடர்ந்து 1981 திசெம்பர் இறுதியில் 28 சதவீதமாக விளங்கிய தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடனின் ஆண்டு வளர்ச்சி வீதம் 1982 திசெம்பர் இறுதியில் 20 சதவீதமாக படிப்படியாகக் குறைவுற்றது இவ்வளர்ச்சியில் (ரூ. 41,220 இலட்சம்) முக்கிய பங்கு (97 சதவீதம்) ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் அதிகரிப்பினல் ஏற்பட்டதாகும். இவ்வாண்டில் இத்துறைக்கான மொத்தக் கொடுகடன் ரூ. 39,860 இலட்சம் அல்லது 26 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் இத்துறைக்கான கொடுகடனும் சென்ற இரு ஆண்டுகளில் வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டின. தனியார்துறைக்கான கொடுகடன்வீழ்ச்சிக்கு பலகாரணிகள் உதவியாயிருந்தன. முதலாவதாக 1982இன் இறுதிக் காலாண்டில் இத்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஜனுதிபதித் தேர்தலினுலும், அனைத்து மக்கள் வாக்கெடுப்பிலும் வர்த்தக மக்களிடையே நிலவிய நிலையற்ற தன்மையே காரணமாகும். இரண்டாவதாக 1982இல் தீவிரப்படுத்தப்பட்ட, கட்டுப்பாடான நாணயக் கொள்கை நடவடிக்கைகள் தனியார் துறையிலிருந்து எழும் கொடுகடன்

கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. மூன்ருவதாக அதிக கொடுகடன் கேள்விக்கான காரணிகளில் ஒன்ருகிய மொத்தத் தொகைக் கழிவு வசதி 1981 மார்ச் இறுதியில் மீளப்பெறப்பட்டது.

இவ்வாண்டில் கூட்டுறவு நிறுவனங்களும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் அதிகளவு கடன்பாடுகளுக்கு வங்கித்துறையிடம் நாடவில்லை. உண்மையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் ரூ. 540 இலட்சத்தால் குறைவுற்றிருக்கையில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகள் ரூ. 1,900 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்தன.

1980 தொடக்கம் அவதானிக்கப்பட்ட போக்குகளுக்கிணங்க வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) பெருமளவில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் வீழ்ச்சியினுல் 1982இல் ரூ. 5,680 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் வீழ்ச்சிக்கு மத்திய வங்கியினது பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாக இருக்கையில் இப்பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ரூ. 15,840 இலட்சம் கொண்ட அதிகரித்த வெளிநாட்டுக் கடன்பாடுகளே முற்றிலும் காரணமாகும்.

வர்த்தக வங்கித் தொழில்

திரவத்தன்மையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு 1982ஆம் ஆண்டினது வர்த்தக வங்கித்தொழிலின் சிறப்புப் பண்பாக அமைந்தது. சென்ற ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்குகளைத் தொடர்ந்து வைப்புக்களின் கணிசமானளவு வளர்ச்சியும், தனியார்துறையிலிருந்து கொடுகடன் கேள்விக்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியும் இணைந்து வர்த்தக வங்கிகளின் திரவ அடிப்படையை அதிகரிக்கச் செய்தன. இத்தொடர்ச்சியானதிரவத்தன்மையின் திருத்தத்திற்கு ஏற்ப கவர்ச்சிகரமான குறுந்தவணை முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களுக்கான வசதிகள் அதிகரிக்கப் பெருமையினுல் வர்த்தக வங்கிகள் ஆண்டின் நடுப்பகுதியில் தம் வைப்பு திரட்டும் திட்டங்களில் சில மாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. முதலாவதாக இரு அரச வங்கிகளிலும் சகல வகையான தவணை வைப்புக்களின் மீதான வட்டி வீதங்களும் குறைக்கப்பட்டன. இதை ஏனைய பல வங்கிகளும் பின்பற்றின. இரண்டாவதாக பல வர்த்தக வங்கிகள் 24 மாத வைப்புக்கள் ஏற்கும் வழக்கத்தைக் கைவிட்டன. மூன்ருவதாக தொடர்பான குறுந்தவணை வைப்புக்கள் மீது (6 மாதங்களும் அதற்கு உட்பட்டவையும்) அதிக வீதங்களை வழங்குவதன் மூலம் 12 மாத வைப்புக்களின் உட்பாய்ச்சலைக்கூட ஊக்கமிழக்கச் செய்தன. குறுந்தவணை வைப்புக்களின் சார்பாக வைப்புக்களின் தவணை அமைப்பைச் சீராக்கும் அதே வேளையில் வைப்புத்திரட்டின் செலவைக் குறைப்பதே இந்நடவடிக்கைகளின் குறிக்கோளாகும். அதேசமயம் இரு அரச வங்கிகளும் தமது சிறப்பு நீண்ட தவணைச் சேமிப்புத் திட்டங்களை இடைநிறுத்தி வைத்தன. இவை மக்கள் வங்கியின் சிறுவர் வைப்புத் திட்டமும் இலங்கை வங்கியின் தேசிய அறக்கொடைத் திட்டமுமாகும்.

வங்கித்துறை இவ்வாண்டின் அநேக காலங்களில் கூடிய திரவத்தன்மை வாய்ந்தநிலையில் இருந்தபோதும், சில வங்கிகள் நாளாந்த நிலுவைகளைக் கொண்டு கணிக்கப்பட்ட மாதாந்த வட்டிவீதங்கள், சேமிப்புச் சான்றிதழ்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், முன்கூட்டியே கொடுத்தல், சேமிப்பு வைப்புக்கணக்காளர்கள் வழக்கமான வங்கி நேரங்களுக்குப் பின்னும் தமது அலுவல்களை நடாத்துவதற்கு வசதியாக வங்கித்தொழில் நேரங்களை நீடித்தல் போன்ற பல்வேறு ஊக்குவிப்புக்களை வைப்புக்களுக்கு, குறிப்பாக சேமிப்பு வைப்புக்களுக்கு அளிப்பதன் மூலம் வைப்புக்களைத் திரட்டுவதில் தொடர்ந்தும் குறிப்பாக தீவிரமான கொள்கையைக் கடைபிடித்தன. மேலும், சில வங்கிகள் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களிடமிருந்து பெறும் பணவனுப்பல்களைக் காசாக்குவதற்கு விசேட வசதிகளை அளித்தன. இவை இப்பணவனுப்பல்களின் நன்மைபெறுபவர்களிடமிருந்து வைப்புக்களைக் கவரும் நோக்குடனே செய்யப்பட்டன. சில வெளிநாட்டு வங்கிகள் மத்திய கிழக்கிலுள்ள தமது கிளைகள் மூலம் இப்பகுதிகளில் தொழில்புரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பணவனுப்பல்களுக்கு ஆதரவு திரட்ட இயலுமாயிருந்தது. கூடிய தொகையான பதுக்கப்பட்ட பணத்தை வங்கித் துறைக்கு கவருவதன்பொருட்டு வர்த்தக வங்கிகள் தொடர்ந்தும் வைப்புச் சான்றிதழ்களை வழங்கின. 1982 இறுதியில் வைப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு 18 வங்கிகளுக்கு முறைமையான அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அதேநாளில் வைப்புச் சான்றிதழ்களின் வெளிநிற்கும் தொகை ரூ. 3,280 இலட்சமாக அமைந்தது.

1981 காலப்பகுதியில் தொடங்கப்பட்ட வணிக வங்கித் தொழில் நடவடிக்கைகள் 1982 காலப்பகுதியில் இலங்கை வங்கியின் துணை நிறுவனமான ''இலங்கை வணிகத் தொழில் வங்கி'' தொடங்கப்பட்டதுடன் மேலும் விரிவுற்றுக் காணப்பட்டன. இதேவேளையில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டம் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பிரதிபலித்தது. 1982இறுதியில் இலங்கையின் 24 வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகள் தொழிற்பட்டன. இக்கூறுகளின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் 1981 இறுதியில் ரூ. 75.160 இலட்சத்திலிருந்து (ஐஅடொலர் 3,660 இலட்சம்) 1982இறுதியில் ரூ. 138,280 இலட்சமாக (ஐஅ டொலர் 6,490 இலட்சம்) பெருமளவில் உயர்வுற்றன.

வர்த்தக வலயத்திலுள்ள செயற்றிட்டங்களுக்கு நிதியீட்டல் வர்த்தக வலயத்திற்கு வெளியே வதியும் அங்கீகாரம் பெற்ற வதிவோருக்கு யூரோ நாணயக்கடனை வழங்கல், பன்னுட்டு யூரோ நாணய கூட்டுக் கடன்களில் பங்குபற்றல் ஆகியவற்றை வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டக் கூறுகளின் தொழிற்பாடுகள் உள்ளடக்கின.

வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங்கள் 1981இன் ரூ. 61,840 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் 1982இல் ரூ. 74,380 இலட்சத்தால் உயர்வுற்றன. 1982இனது மூலவளங்களில் ஏற்பட்ட கணிசமானளவு பங்கு வளர்ச்சியாகிய ரூ. 59,340 இலட்சங்களுக்கு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரண

மாக விளங்குகிறது. மீளாய்விற்குரிய ஆண்டில் தவணை சேமிப்பு வைப்புக்களும்,
கேள்வி வைப்புக்களும் முறையே ரூ. 51,740 இலட்சத்தாலும், ரூ. 7,600 இலட்சத்
தாலும் வளர்ச்சியுற்று வட்டியைச் சேமிப்பதில் அக்கறையுள்ளவர்களினது தவணை
சேமிப்பு வைப்புக்களுக்கானமுன்னுரிமையை எடுத்துக்காட்டுகின்றது. மூலவளஅடிப்
படை வர்த்தக வங்கிகளின் / மூலதனத்தினதும் ஒதுக்குகளினதும், பங்கிடப்படாத
இலாபங்களினதும் ரூ. 3.340இலட்சம் கொண்ட அதிகரிப்பினுல் மேலும் அதிகரிக்
கப்பட்டது. இதேவேளையில் வர்த்தக வங்கிக் கடன்பாடுகள் ரூ. 3,220 இலட்சத்
தால் உயர்வுற்றன. இவை உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான ரூ. 3,630 இலட்சம்
கொண்ட கடன்பாடுகளையும் மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகள்
உட்பட ரூ. 410 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கடன்பாடுகளின் வீழ்ச்சியையும்
உள்ளடக்கின. ஒப்புநோக்குகையில் 1981ஆம் ஆண்டின் வர்த்தக வங்கி கடன்
பாடுகள் ரூ. 6,670 இலட்சத்தினுல் அதிகரித்தன. 1982ஆம் ஆண்டின் குறைந்தளவு
கடன்பாடுகள் முக்கியமாக வர்த்தக வங்கிகளின் அதிகரித்த திரவத்தன்மையையே
பிரதிபலித்தன. உண்மையில் இவ்வாண்டின்போது மத்திய வங்கியிலிருந்து
தண்ட வீத கடன்பாடுகள் ஒன்றுமில்லாதிருந்த அதே வேளையில் வங்கி வீதக்
கடன்பாடுகள் ஆகக் குறைந்த மட்டங்களுக்கு குறைவடைந்தன.

வர்த்தக வங்கிகளின் வளங்களினதும், இவற்றின் பயன்பாட்டினதும் மாற்றங்
களைத் தேறிய அடிப்படையில் அட்டவணை 1.49 எடுத்துக்காட்டுகின்றது. 1982இல்
ஏனைய தனியார்துறை தமது வைப்புக்களின் ரூ. 32.570 இலட்சம் கொண்ட வளர்ச்
சிக்கு மாருக ரூ. 39.860 இலட்சம் கொண்ட மூலவளங்களைப் பயன்படுத்தின.
ஆகவே இத்துறையினுல் பயன்படுத்தப்பட்ட வளங்களின் தேறிய தொகை
ரூ. 7,290 இலட்சமாக விளங்கியது.

அட்டவணை 1.49

வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

துறைகள்		இறுதி 1979/ இறுதி 1980	இறுதி 1980/ இறுதி 1981	இறுதி 1981/ இறுதி 1982
1. அரசு	...	450.5	– 770.0	– 56.4
2. மத்திய வங்கி	...	409.2	– 429.7	– 315.0
3. அரச கூட்டுத்தாபனங்கள்	...	448.6	198.6	1,379.1
4. கூட்டுறவ நிறுவனங்கள்	...	140.3	– 101.1	72.5
5. ஏனைய தனியார்துறை	...	– 1,427.0	– 669.0	– 729.1
6. வங்கியிடையானவை	...	563.4	1,633.6	– 1.5
7. வெளிநாட்டுத்துறை	...	– 584.9	137.7	– 349.6

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: கழித்தல் அடையாளம் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டை குறிக்கிறது.
(அ) கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் முதிர்ச்சிபெற்ற பொருட்கள் பற்றுச்சீட்டின் திரவ நிலையில்
தங்கியிருக்கும் நெற்சந்தைப்படுத்தும் சபையின் தொங்கற் கணக்கின் தொகையை கணக்கிலெடுப்
பதற்குச் சீராக்கப்பட்டது. 1980, 1981, 1982இன் மாற்றங்கள் முறையே ரூபா -4,541 இலட்சம்,
ரூபா –1,678 இலட்சம், ரூபா –523 இலட்சம் ஆகும்.

1982இல் மத்திய வங்கிக்கு வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலிருந்தான தேறிய ஓர் வருவாய் ஏற்பட்டது. இது வர்த்தக வங்கிகளில் அதிகரித்த திரவத் தன்மையினுல் மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகளின் வீழ்ச்சியையே (ரூ. 230 இலட்சம்) ஓரளவு பிரதிபலிக்கின்றது. மேலும் மத்திய வங்கியிலுள்ள ஒதுக்குகள் ரூ. 2,920 இலட்சத்தால் அதிகரித்து வைப்புக்களின் படிப்படியான அதிகரிப்பைப் பிரதிபலித்தன.

1982இல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் வைப்புக்களும், இக்கூட்டுத் தாபனங்களுக்கான முற்பணங்களும் முறையே ரூ. 15,690 இலட்சத்தாலும், ரூ. 1,900 இலட்சத்தாலும் உயர்வுற்றன. இதன் விளைவாக இத்துறை வர்த்தக வங்கிகளின் மூலவளங்களைக் கட்டியெழுப்புவதற்கான கணிசமானளவு பங்கை அளித்தது. இதேவேளையில், ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட முக்கிய மாக வெளிநாட்டு நிலுவைகளின் அதிகரிப்பினுல் வெளிநாட்டுத்துறை ரூ. 3,500 இலட்சம் கொண்ட அளவிற்கு மூலவளங்களைப் பயன்படுத்தியது.

1982 இல் அரசாங்கத்துறையினது வர்த்தக வங்கி மூலவளங்களின் தேறிய பயன்பாடு ரூ. 560இலட்சமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் இத்துறையினுல் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 7,700 இலட்சமாக விளங்கியது. 1982 இல் மூலவளங்களைக் குறைந்த அளவிற்கு பயன்படுத்தியமை இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வர்த்தக வங்கிகள் இரண்டாந்தரத் திறைசேரி உண்டி யல்கள் சந்தையில் குறைந்தளவிற்கு பங்குபற்றியமையையே முக்கியமாகப் பிரதி பலிக்கின்றது. ஆயினும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அரசாங்க ரூபாப் பிணைகளில் வர்த்தக வங்கிகளின் முதலீடுகள் ரூ. 1,030இலட்சத்தால் உயர்வுற்றன.

வர்த்தக வங்கிகளின் அதிகரித்த திரவநிலையைப் பிரதிபலிக்கும் வகையில் கேள்வி வைப்புக்களுக்கான திரவ இருப்புச்சொத்துக்களின் விகிதம் 1981 இறுதியில் 110 சதவீதத்திலிருந்து 1982 இறுதியில் 121 சதவீதமாக அதிகரித்தது. மேலும் மீளாய்விற்குரிய ஆண்டில் கொடுகடன் வைப்பு விகிதம் 99 இலிருந்து 92 ஆகக் குறைவுற்றது.

வங்கிக்கிளை விரிவாக்கம்

இலங்கை மத்திய வங்கி தனது இரண்டாவது பிரதேசக்கிளையை 1982 மாச்சு 22ஆம் திகதி அனுராதபுரத்தில் திறந்தது. முதலாவது பிரதேசக்கிளை 1981மாச்சில் மாத்தறையில் திறக்கப்பட்டது.

1982இல் வர்த்தக வங்கிகள் 39 கிளைகளைத் திறந்தன. இரு வெளிநாட்டு வங்கி களால் கொழும்பிற்கு வெளியே கிளைகள் திறக்கப்பட்டமை இவ்வாண்டில் அவ தானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பாகும். 1982 யூனில் இந்திய அரச வங்கி அனுராதபுரத்தில் ஓர் கிளையொன்றைத் திறந்தது. இதுவே அண்மைக்காலங்களில் கொழும்பிற்கு வெளியே கிளையைத் தொடங்கிய முதலாவது வெளிநாட்டு வங்கி யாகும். இந்தியன் ஓவசீஸ் வங்கியும் 1982 ஒற்றோபரில் மாத்தறையில் கிளையொன் றைத்திறந்தது. இக்கிளைகளைத் திறந்தமை கிராமியக் கொடுகடன்துறையிலும்

இவ்வங்கியின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதற்கான விருப்பத்தையே பிரதிபலிக்கின்றது. இதேவேளையில் இலங்கை வங்கியினுல் 24 கிளைகளும், மக்கள் வங்கியினுல் 10 கிளைகளும், அட்டன் நசனல் வங்கியினுல் 2 கிளைகளும் திறக்கப்பட்டன. 1982சனவரியில் இலங்கைவங்கி தனது முதலாவது பிரதிநிதித்துவ அலுவலகத்தை சிங்கப்பூரில் திறந்தது. இதன் முக்கிய குறிக்கோள் தலைமை அலுவலகத்திற்கு மேலதிக தொழிலுக்கான ஆதரவைத்திரட்டுவதும், இறுதியாக படிப்படியாக கடல்கடந்த வெளிநாட்டுக் கூறுகப் பணியாற்றுவதுமேயாகும். அண்மை ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட வழக்கத்திற்கு இணங்க இலங்கை வங்கி தனது வேளாண்மைப்பணிநிலைய கிளைகள் 16ஐ மீளமைவு செய்தமையால் ஆண்டின் இறுதியில் மீளமைவு செய்யப்பட்ட மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை 303 ஆக விளங்கியது.

இவ்வாண்டின் வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கு வங்கி இலங்கையில் கிளையொன்றைத் திறந்து இந்நாட்டில் வர்த்தக தொழிலாற்றும் வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 1982 இறுதியில் 25 ஆகக் கொண்டு வந்தது. அத்துடன் ஜிருட்பாங்க் ஒவ் பிலெடெல்பியாவும் இலங்கை பிரதிநிதித்துவ அலுவலகம் ஒன்றைத் திறந்தது. இதுவே அண்மை ஆண்டுகளில் தொடக்கப்பட்ட இத்தகைய முதலாவது அலுவலகமாகும். இதே வேளையில் தேசிய சேமிப்பு வங்கியும் 2 கிளைகளைத் திறந்து ஆண்டினிறுதியில் தனது மொத்தக் கிளைகளின் எண்ணிக்கையை 47ஆகக் கொண்டு வந்தது.

வட்டிவீதங்கள்

வட்டிவீதக் கொள்கையை முழுமையாக நோக்கின் 1982ஆம் ஆண்டு இலங்கையின் வட்டிவீத அமைப்பில் சிறுமாற்றங்களே ஏற்பட்டன. இவ்வாண்டில் குறைந்த வீத பணவீக்கம் நிலவியபோதும் 1977இல் தொடக்கப்பட்ட கூடிய வட்டிவீதக் கொள்கை 1980,1981இல் அதிகரிக்கப்பட்டு 1982இல் மேலும் தொடரப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட நாணயக்கொள்கை நடவடிக்கைகளிலிருந்து ஒருபுறமும், சகல வகையான வைப்புக்களின் உட்பாய்ச்சலிலிருந்து மறுபுறமாக கொடுகடன் கேள்வியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி இவ்வாண்டின் வர்த்தக வங்கித் துறையில் மேலதிகத் திரவத்தன்மையை விளைவித்தது. இந்நிலைக்கான வர்த்தக வங்கிகளின்எதிர்த்தாக்கம் நிதிகளின்செலவைக்குறைக்கும் நோக்குடன் எல்லாவகை நிலையான வைப்பு வீதங்கள் மீதும் கீழ்நோக்கிய சீர்திருத்தம் செய்தமையேயாகும். இதன் விளைவாக தவணை வைப்புக்களின் மீதான வட்டி வீதங்கள் 2-5 வரையான சதவீத புள்ளிகளால் சிறிதளவு குறைக்கப்பட்டன. அநேக வர்த்தக வங்கிகள் 24 மாத வைப்புக்கள் ஏற்கும் வழக்கத்தை நிறுத்தியதுமட்டுமல்லாமல் 6 மாத வைப்புக்களுக்கு அதிக வீதங்களை வழங்குவதன்மூலம் 12 மாத வைப்புக்களை ஏற்பதைக்கூட ஊக்கமிழக்க செய்தன.

எல்லா வர்த்தக வங்கிகளின் அதிகரித்த திரவநிலையைப்பிரதிபலிக்கும் வகையில் ஆண்டுத் தொடக்கத்தில் ஆண்டொன்றுக்கு 13.75 - 15.00 சதவீத மட்டத்தில்

வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண் தொகைகள்



இலங்கை மத்திய வங்கி

அமைந்த அழைப்புச்சந்தை வீதங்கள் இரண்டாம் காலாண்டில் ஆண்டொன்றுக்கு 12.76- 15.00 சதவீத மட்டமாகக் குறைவுற்று ஆண்டினிறுதியில் படிப்படியாக ஆண்டொன்றுக்கு 15.75-18.50சதவீத மட்டமாக உயர்வுற்றன. இதே வேளையில் ஆண்டுத்தொடக்கத்தில் ஆண்டொன்றுக்கு 13.75-14.50 சதவீத மட்டத்தில் அமைந்த இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டி வீதங்கள் ஆண்டினிறுதியில் ஆண்டொன்றுக்கு 12.25-13.25 சதவீத மட்டத்திற்கு குறைக்கப்பட்டது.வட்டி வீதங்களில் இம்மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையிலும் சில சமயங்களில் வட்டிவீத நன்மைகளைப் பெறும்வகையிலும், சில சமயங்களில் நிறுவன காரணிகளாலும் வர்த்தக வங்கிகளின் மேலதிக நிதிகள் அழைப்புச்சந்தையிலிருந்து இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தைக்கு இடையிடையே மாற்றல் செய்யப்பட்டன.

முதன்மைச்சந்தையில் திறைசேரி உண்டியல்கள் மீது அரசாங்கம் தொடர்பான குறைந்தளவு கவர்ச்சிகரமான நிலையான வீதங்களை வழங்கியமை குறுந்தவணை முதலீட்டாளர்கள் தம் நிதிகளை இதைவிடக்கூடிய வருவாய்களை அளிக்கும் முதலீடுகளில் முதலீடு செய்வதற்கு வழிவகுத்தது. 1981இன் ஆண்டொன்றுக்கு 13சதவீத நிலையான வீதத்துடன் ஒப்புநோக்குகையில் சந்தை நிலைமைகளைப் பொறுத்து 3,6 மாத உண்டியல்கள் மீதான திறைசேரி உண்டியல் வீதம் ஆண்டொன்றுக்கு 13.00-13.50 சதவீத இடையிலான மட்டத்தில் வேறுபட்டது. இம்மாற்றம் திறைசேரி உண்டியல்களின் முதன்மைச் சந்தையில் வங்கிகளையும் வங்கியல்லா முகவர் நிலையங்களையும் கவர்ந்தமைக்கான விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது.

அதிகரித்த திரவநிலைமையுடன் சில வர்த்தக வங்கிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுகடன் வீதங்களைப் பிரதிபலிப்பதன்மூலம் முற்பணங்களின் தொகையை அதிகரித்தன. இது குறிப்பாக வியாபார தொழிற்பாடுகளுக்கும், சிறு நடுத்தர தவணைக் கைத்தொழில்களுக்கும் வழங்கும் முற்பணங்களில் காணப்பட்டது. ஆயினும் வர்த்தக வங்கிகளினதோ அன்றி நீண்ட தவணைக் கொடுகடன் நிறுவனங்களினதோ மொத்த கொடுகடன் வீதங்களில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. 1982 இன் நடுப்பகுதியில் வர்த்தக வங்கிகளினது தவணை வைப்புக்களின் வட்டி வீதங்கள் மீதான கீழ் நோக்கிய திருத்தத்தைத் தொடர்ந்து தேசிய சேமிப்பு வங்கியின் (தே. சே. வ.) வட்டி வீதங்களில் எதுவித மாற்றமும் ஏற்படாமையின் காரணமாக தேசிய சேமிப்பு வங்கிக்கும் ஏனைய வர்த்தக வங்கிகளுக்குமிடையில் ஏறக்குறைய 2-4 சதவீத வட்டிவீத புள்ளிகளில் வேறுபாடு இருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்தின் வகை 11இன் கீழ் ஏற்றுமதிகளின் ஊக்குவிப்புக்கும் அபிவிருத்திக்குமாக வழங்கப்படும் மீளநிதியிடல் கடன்கள் மீதான மீள் கடனளிப்பு வீதங்கள் 1982 சனவரி 22 தொடக்கம் திருத்தியமைக்கப்பட்டன. இதன் விளைவாக ரூ.50 இலட்சத்திற்கு மேற்படாத செலவையுடைய செயற்றிட்டங்களுக்கான மீள் கடனளிப்பு வீதம் ஆண்டொன்றுக்கு 12 சதவீதமாகவும் ரூ. 50 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவையுடைய

ஏனைய செயற்றிட்டங்களுக்கான மீள் கடனளிப்பு வீதம் 13 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டன. ஆயினும் 1982 யூலை 20 தொடக்கம் பின் கூறப்பட்ட வகைக்கான மீள் நிதியிடல் வீதம் 11½ சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக சிறிதளவால் குறைக்கப்பட்டிருக்கையில் கொடுகடன் வீதம் ஆண்டொன்றுக்கு 13 சதவீதத்தில் எதுவித மாற்றமுமின்றியிருந்தது.

மத்திய வங்கித் தொழில்

மத்திய வங்கியின் மொத்த இருப்புச் சொத்துக்கள் பொறுப்புக்கள் 1982 திசெம்பர் இறுதியில் ரூ. 301,660 இலட்சமாக அமைந்தன. இது இவ்வாண்டில் ரூ. 28,150 இலட்சம் அல்லது 10 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது இருப்புச் சொத்துக்கள் பகுதியில் இவ்வதிகரிப்பு உள்நாட்டு (ரூ. 23,860. இலட்சம் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் (ரூ. 4,290 இலட்சம்) இரண்டினுலும் பங்கு கொள்ளப்பட்டது.

உள்நாட்டு இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பிற்கு அரசாங்க, அரசாங்க உத்தரவாதப்பிணை உடமைகளில் ஏற்பட்ட ரூ. 32,920 இலட்சங்கொண்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இது திறைசேரி உண்டியல்களின் வெளியீடு மூலம் அரசாங்கம் மத்திய வங்கி வளங்களைப் பயன்படுத்தியமையின் அளவையே முதன்மையாகக் காட்டுகிறது. மறுபுறம் இரண்டாம் அரையாண்டில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் வர்த்தக வங்கி முதலீடுகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றமையினுல் வர்த்தக வங்கிகளுக்காக மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கு மேலும்அரசாங்கக் கடன்பாட்டை மாற்றுவது தடைசெய்யப்பட்டது. மேலும் அரசாங்கம் மத்திய வங்கி நிதிகளில் தங்கியிருந்தமையைப் பிரதிபலிக்கும் வகையில் 1982இல் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்கள் ரூ. 6,040 இலட்சத்தால் உயர்வுற்றன. ஆயினும் வர்த்தக வங்கியினது திரவநிலைமையின் பொதுவான திருத்தத்தினுல் வர்த்தக வங்கிகளுக்கான குறுந்தவணை முற்பணங்கள் வீழ்ச்சியுற்றன.

பன்னுட்டு ஒதுக்கிலேற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டிலுள்ள பணத்திலும் நிலுவைகளிலும் (ரூ. 6,280 இலட்சம்) ஏற்பட்ட அதிகரிப்பினுலும், பன்னுட்டு நாணய நிதியிலிருந்து பெற்ற மீளக் கொள்வனவுகளினுல் சிஎஉ உடைமைகளின் (ரூ. 2,890 இலட்சம்) வீழ்ச்சியினுல் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பிணை உடைமைகளின் (ரூ. 900 இலட்சம்) அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது. திருந்திய பன்னுட்டு ஒதுக்கிற்கு யூரோநாணயக்கடன் உடன்படிக்கையின் கீழ் பெற்ற பெருமளவு எடுப்பனவுகளும், வெளிநாட்டிலிருந்து பெற்ற அதிகரித்த கடன்பாடுகளுமே பெருமளவு காரணமாகும். ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்புத் தேய்வு பன்னுட்டு ஒதுக்கின் ரூபாப் பெறுமதி அதிகரிப்பிற்குக் காரணமாயிருந்தது.

பொறுப்புக்கள் பகுதியில், நாணய வெளியீடு 1981இன் ரூ. 6,340 இலட்சங்கொண்ட ஆகக்குறைந்த அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் ரூ. 12,130 இலட்சத்

தால் உயர்வுற்றது. இதே வேளையில் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 15,840 இலட்சத்தால் உயர்வுற்று இவ்வங்கியின் மொத்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பிற்கு காரணமாயிருந்தன. இவ்வாண்டில் நடுத்தர நீண்ட தவணை கொடுகடன் நிதியத்தின் (நநீகொநி) கொடுகடன் வசதிகளை அதிகரிக்கு முகமாக இந்நிதியத்திற்கு மத்திய வங்கி ரூ. 2,500 இலட்சத் தொகையை மாற்றஞ்செய்தது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் வசதிகளைத் திருத்தியமைக்கும் நோக்குடன் சில திருத்தங்களும் செய்யப்பட்டன. இவை இவ்வறிக்கையின் வேறிடத்தில் கூறப்பட்டுள்ளன.

தேசிய கொடுகடன் திட்டம் - 1982

மத்திய வங்கியினுல் வரையப்பட்ட தேசிய கொடுகடன் திட்டம் அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக்கடன் வழங்கலுடன் தொடர்புள்ளது. இத்திட்டம் 1982 இறுதியளவில் தனியார்துறையினருக்கான வெளிநிற்கும் கொடுகடன் ரூ. 276,200 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் இது 1981 இறுதியில் வெளிநிற்கும் கொடுகடன் மட்டத்தின் மேலாக ரூ. 66,200 இலட்சம் அல்லது 32 சதவீத மதிப்பிடப்பட்ட அதிகரிப்பொன்ருகும். பல்வகைத் துறைகளிற்கிடையே கொடுகடனின் கிடைக்கும் தன்மை, திறமையான ஒதுக்கீடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதுடன் பொருளாதாரத்தின் உண்மைத் துறைகளில் விரும்பப்பட்ட இலக்குகளுடன் நிதிப்பாய்ச்சல்களை ஒப்பிடுவதற்கும் முயற்சி செய்கிறது. நிதி, உண்மை வெளியீட்டுப் பாய்ச்சலுக்கிடையில் சீராக்கத்தைப் பேணுவதற்கு திட்டமிடப்பட்ட உண்மை வளர்ச்சி, மதிப்பிடப்பட்ட பணவீக்க வீதம், பொருளாதாரத்தில் அதிகரித்த நாணயமாக்கலுக்கான அதிகரிப்பொன்று ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பொருளாதாரத்திற்கான விரும்பப்பட்ட நாணய இலக்கு தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டுத்துறையின் நடத்தைக்கும் அரசின் கொடுகடன் தேவைகளுக்கும் இடமளித்தபின் தனியார்துறைக்கான நாணய இலக்கு அனுமதிக்கத்தக்க கொடுகடன் இலக்கினுள் அடக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடுகடன், கொடுகடனின் துறை ரீதியான பகிர்ந்தளிப்புக்களின் பொருத்தமான ஆய்வுகளும் விபரமாக ஆராயப்பட்ட பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்பு வர்த்தக வங்கிகளுக்கிடையே ஒதுக்கப்பட்டது.

இலங்கையில் கொடுகடன் திட்டமிடல் 1981இல் அதன் தொடக்கத்திலிருந்து மட்டமான கடன் வழங்கக் கூடிய நிதியங்களின் சரியான பயன்பாட்டை நோக்கில் கொண்டு பொருளாதாரத்தின் வேறுபட்டதுறைகளிற்கிடையே தனியார் துறைக் கொடுகடன் பயன்பாட்டினை சிக்கனப்படுத்துவதற்கு முயற்சித்தது. 1982இல் கொடுகடன் திட்டம் ஏற்றுமதிகள், கைத்தொழில், வேளாண்மை, சுற்றுலா ஆகியவற்றுக்கான கடன் வழங்கலுக்கு முன்னுரிமை வழங்கியது. மொத்தக் கொடுகடனில் 21 சதவீதம் கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்டவேளையில் ஏற்றுமதிகளுக்கும் வேளாண்மைக்கும் ஒதுக்கப்பட்ட பங்குகள் முறையே 18சதவீதமாகவும் 13 சதவீதமாகவும் விளங்கின. சுற்றுலாத்துறைக்கான ஒதுக்கீடு ரூ. 5,980 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் மேலாக ரூ. 1,780 இலட்ச அதிகரிப்பொன்றைக்காட்டியது.

தனியார்துறையினல் பயன்படுத்தப்பட்ட உண்மையானகொடுகடன் ஆண்டின் முதலிரு காலாண்டுகளில் திட்டமிடப்பட்ட கொடுகடன் இலக்குகளிலிருந்து தவிர்க்கக் கூடிய விலகலொன்றையே காட்டுகிறது. எனினும் இறுதி இரண்டு காலாண்டுகளிலும் உண்மைக் கொடுகடன் மட்டங்கள் திட்டமிடப்பட்ட மட்டங்களின் கீழ் வீழ்ச்சியுற்று 1982 இறுதியளவில் ரூ. 10,000இலட்ச வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இது பணவீக்க வீதத்தின் மந்த நிலையினைத் தொடர்ந்து உயர்ந்த உண்மைக் கடன் வழங்கும் வீதங்களில் ஏற்பட்ட கொடுகடனுக்கான கேள்வியின் வீழ்ச்சியினதும் ஆண்டின் பிற் பகுதியில் பொருளாதார நடவடிக்கைளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையினதும் ஒன்றுசேர்ந்த விளைவாகும். பணவீக்க வீதத்தின் மிதமான போக்கின் காரணமாக பெறப்பட்ட கொடுகடன் மட்டம் பெயரளவு நியதிகளில் திட்டமிடப்பட்ட மட்டத்திலும் கீழ் விளங்கியபோதிலும் உண்மை நியதிகளில் கொடுகடன் மட்டம் அதே வளர்ச்சியைப் பதிவு செய்தது.

1982 யூன் / யூலை இல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும் வர்த்தக வங்கிகளினல் எதிர்நோக்கப்பட்ட சிக்கல்களை விவாதிப்பதற்காகவும் வர்த்தக வங்கிகளுடன் தொடர்ச்சியாக மீளாய்வுக் கூட்டங்கள் கூட்டப்பட்டன. இக்கூட்டங்களில் வங்கிகள் கைத்தொழில் துறைக்குக் குறிப்பாக, ஏற்றுமதிசார் கைத்தொழில்களுக்கு கூடியளவு கொடுக்கடன் வழங்குவதற்கு கேட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து கைத்தொழில் கொடுகடன் பங்கு தொடக்க இலக்கான 21 சத வீதத்திலிருந்து ஆண்டு இறுதியில் 25 சத வீதத்திற்கு உயர்ந்தது. அதேவேளையில் 1982 இறுதியில் இறக்குமதிக் கொடுகடனின் பங்கு 19 சத வீதத்திலிருந்து 14 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நாணயக்கொள்கை

1982 இல் காணப்பட்ட முதன்மை நாணய மாறிகளின் மிதமான விரிவாக்கம் இவ்வாண்டில் எதுவித முக்கிய கொள்கை மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. எனினும் முன்னைய ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்ட கொள்கை முறைகள் உள்நாட்டுக் கொடுகடனிலும் நாணயக் கூட்டுக்களிலும் மிதமான வளர்ச்சியை பேணும் நோக்கில் தொடர்ந்தும் இருந்தன. இக்கொள்கை நடவடிக்கைகளின் முக்கிய பண்புகளாக 14 சதவீத வளர்ச்சி வீதம் வர்த்தக வங்கிக்கான மத்திய வங்கியின் கடனுதவியில் ரூ. 3,550 இலட்சம்கொண்ட கடுமையான குறைப்பு, வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகளின் மீதான மிகக் குறைந்த தண்ட வீதங்களில் பொதுவான கடனுதவிக்கும் மேலானது (ஆண்டுக்கு 20 - 30 சத வீதத்திலிருந்து ஆண்டுக்கு 21 - 30 சத வீதத்திற்கு) சிறிதளவு அதிகரிப்பு சட்டப்படியான ஒதுக்கு தேவைகளில் அதிகரித்த கேள்வி வைப்புக்கள் மீது (ஆண்டுக்கு 12 இலிருந்து 14 சதவீதமும் தவணை, சேமிப்பு வைப்புக்களின் மீது ஆண்டுக்கு 5 இலிருந்து 6 சத வீதமும்) ஆகியவை விளங்கின.

1982 காலப்பகுதியில் பொருளாதாரத்தில் நிரம்பலைத் தூண்டுவதற்கு நாணய கொள்கை நடவடிக்கைகளைப்பயன்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக நிரம்பல்

ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் துறையில் நடைமுறையிலுள்ள கொள்கைகளில் குறிப்பிட்ட மிகச் சிறிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வழிமுறைகள் திடமானதும், முன்னேற்றமுமான நோக்கங்களை அடைவதற்கு ஆற்றல்மிக்க முயற்சியொன்றை கொண்டிருந்தன.

இலங்கைப் பொருளாதாரத்தில் முக்கிய துறையாக ஏற்றுமதித்துறையே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்றுமதித் துறைக்குப் போதுமான நடுத்தர நீண்ட கால கொடுகடன் ஏற்பாடுகள் அவ்வகையான கொடுகடனுக்கான உயர்ந்த கேள்வியினதும் செயற்றிட்ட நிதியிடலில் வர்த்தக வங்கிகளின் திறமையான பங்குபற்றலை அதிகரிக்கும் தேவையினதும் நோக்கில் அவசியமானதொன்றுனது. இத்துறைக்கு சிறப்பான கவனமொன்றை வழங்கும் நோக்கோடு வகை II இன் கீழ் மத்திய வங்கியின் நடுத்தரநீண்டகால கொடுகடன் நிதியிலிருந்து (நநீகொநி) வழங்கப்படும் மீள் நிதியிடலின் அளவு 1982 சனவரி 22 இலிருந்து செயற்றிட்டத்தின் மொத்தச் செலவை ஈடுசெய்வதற்காக 80 சத வீதத்திலிருந்து 100 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இத்திருத்தியமைத்தலோடு, மீள் நிதியிடல் வீதமும் மீள் கடன் வழங்கும் அளவுகளும் கடனின் தொகைக்கேற்ப திருத்தியமைக்கப்பட்டன. இதன்படி மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்தினை விஞ்சாத செயற்றிட்டங்களுக்கு 2 சத வீதப்புள்ளிகளில் மீள் கடன் வழங்கும் எல்லையளவுக்கமைய வட்டி வீதம் ஆண்டுக்கு 10 சத வீதத்திலிருந்து நிலைப்படுத்தப்பட்ட வேளையில் ரூ. 50 இலட்சத்தை விஞ்சுகின்ற செயற்றிட்டங்களுக்கான மீள் நிதியிடல் வீதம் 1½ சத வீதப் புள்ளிகள் மீள கடன் வழங்கும் எல்லையளவுக்கமைய ஆண்டுக்கு 11½ சத வீதத்தில் நிலைப்படுத்தப்பட்டது. 1982 யூலை 20 ஆம் நாளிலிருந்து பின்னைய வகைக்கு பொருந்தக் கூடிய மீள் நிதியிடல் வீதம் 2 சத வீதப்புள்ளிகள் மீள் நிதியிடல் எல்லையளவுக்கமைய ஆண்டுக்கு 11½ சத வீதத்திலிருந்து 11 சத வீதத்திற்கு சிறிதளவால் திருத்தப்பட்டது. செயற்றிட்ட நிதியிடலுக்கு மேலும் சலுகைகளை வழங்கும் நோக்கத்துடன் மத்திய வங்கி நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தை ரூ. 5, 250 இலட்சத்திலிருந்து ரூ. 7,750 இலட்சத்திற்கு 1982 யூனில் உயர்த்தியது.

நிதிகளின் அதிகரிப்புக்கும் நநீகொ நிதியத்திடமிருந்தான மீள் நிதியிடல் கடன்கள் மீதான வட்டி வீதங்களில் செய்யப்பட்ட திருத்தத்திற்கும் மேலும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்பான கொடுகடனுக்கான வர்த்தகவங்கிகளுக்கு கிடைக்கக்கூடிய ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதிக்கு ஆண்டுக்கு 12 சதவீத சலுகை வீதத்தில் ஒதுக்கப்பட்ட அளவு வர்த்தக வங்கிகளுக்கு மேலும் ஆறுதல் வழங்குவதற்காகவும் ஏற்றுமதி நோக்கங்களுக்கான கடன் வழங்கல்களை உயர்த்து

வதற்காகவும் தனிப்பட்ட ஒவ்வோர் விடயம் என்ற அடிப்படையில் ரூ. 5,750 இலட்சத்திலிருந்து ரூ. 5,900 இலட்சத்திற்கு இவ்வாண்டுக் காலத்தில் உயர்த்தப் பட்டது.

1982 பெப்புருவரி 3ஆம் நாளிலிருந்து வர்த்தக வங்கிகள் 1976 யூன் 30ஆம் நாளில் வெளிநிற்கும் மொத்தக் கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் மேலாக பொது மக்களுக்கு பணம் கடன்வழங்கும் வியாபாரத்திலும் / அல்லது தவணைக் கொள்வனவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள வங்கியல்லாக் கூட்டு நிலையங் களுக்கும் அமைப்புகளுக்கும் கடன்களும் முற்பணங்களும் வழங்குவதற்கு அனு மதிக்கப்பட்டன. எனினும் இது ஒவ்வொரு வங்கியையும் பொறுத்தமட்டில் நிலச்சமன்பாட்டுப் பாரக் கருவிகளையும், பயணி வண்டிகளையும் உள்ளடக்கும். இக்கருவிகள் அல்லது வண்டிகள் புதியனவோ அல்லது பாவிக்கப்பட்டனவோ என்றதை கருத்திற்கொள்ளாமல் மூலதன கருவிகளும் வர்த்தக வண்டிகளும் வாங்குவதற்கு வழங்கப்பட்ட நிதியைக் குறிக்கும் இம்மிகையின் மீது சார்ந்து விளங்கியது. இதற்கு மேலாக வதிவோர்களுக்கும் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கூட்டுநிலையங்கள் அல்லது தோட்டங்களும் ஏனைய அசைவற்றன வும் கொள்வனவு செய்வதற்கான வர்த்தக வங்கிக் கொடுகடனில் 1962இல் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடு 1982 யூன் 8ஆம் நாளிலிருந்து மீளப்பெறப்பட் டது.

நிரம்பல் முகாமைத்துவத்தின் சூழலில் இக்கொள்கை வழிமுறைகளுக்கு மேலாக முன்னுரிமை துறைகளுக்கு இரண்டாவது தொடர்ந்துவரும் ஆண்டு போதுமான கொடுகடன் பாய்ச்சல்களை உறுதிப்படுத்தியவாறு தேசிய கொடு கடன் திட்டத்தினூடாக கிடைக்கத்தக்க மூலவளங்களின் திறமையான ஒதுக்கீடு தொடர்ந்தும் இருந்துவந்தது.

1982இல் வட்டிவீத அமைப்பில் முக்கிய மாற்றங்கள் இல்லாதபோதிலும் வர்த்தக வங்கிகளின் மிகையான திரவ நிலைமையின் தாக்கம் எல்லா தவணை வைப்புக்களின் மீதான வட்டி வீதங்களிலும் கீழ் நோக்கிய திருத்தமொன்றை விளைவித்தது. இம்மாற்றங்களுக்கும் மேலாக 1982இன் இறுதி அரை ஆண்டில் திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டி வீதத்தில் முக்கிய மாற்றமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. 1981இல் திறைசேரி உண்டியலுக்கான இரண்டாம் தரச் சந்தையின் அறிமுகப்படுத்தலும் இச்சந்தையின் மாற்றத்தக்க வட்டி வீதங் களும் முதன்மைச் சந்தையில் மாற்றத்தக்க வீதங்களைக் கோரின. அதன்படியே 1982 நவம்பர் இலிருந்து 3 மாத, 6 மாத திறைசேரி உண்டியல் வீதம் சிறிதளவில் மாற்றமடைய அனுமதிக்கப்பட்டது.

1982இன் நாணய முகாமைத்துவத்தின் முக்கிய பண்பு கிடைக்கத்தக்க எல்லா விலைச் சுட்டெண்களின் மிதமான மாற்றங்களிலிருந்து குறிப்பாக ஆண்டின் இறுதியில் காணக்கூடியவாறு நாணய விலை உறுதிப்பாடு தொடர்ந்தும் காணப்பட்டதாகும். கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொநுவிசு) 5சதவீத அதிகரிப்பொன்றைப்பதிவு செய்தவேளையில் 1982 திசெம்பருடன் முடிவுற்ற 12மாத காலப்பகுதியில் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் மொத்தவிற்பனை விலைச்சுட்டெண் இவ்வாண்டில் 0.6 சதவீதத்தால் சிறிதளவால் உயர்ந்தது. அவ்வாறே 1982இல் பணவீக்க வீதம் குறிப்பிடத்தக்கவகையில் வீழ்ச்சியடைந்தது. இணைந்த வகையில் கட்டுப்பாடான நாணயக் கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டமையும் இம்முன்னேற்றத்திற்கு துணை நின்றன எனலாம்.